முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 849

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.01.2022, செவ்வாய்கிழமை

1. தர்மசக்தியே அரங்கா போற்றி
   தரணிகாத்திடும் தேசிகா போற்றி
   பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
   பேராசானாய் வந்த குருராஜனே போற்றி
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (பிலவ வருடம் தை மாதம் 12ம் நாள், 25.01.2022 செவ்வாய்கிழமை)
   வரமென அரங்கன் சக்திகொண்டு
   வையகம் ஞானபலம் பெறக்கூடும்
3. கூடாத மாச்சர்யங்கள் அகன்றோடி
   குரு அரங்கன் தயவாலே நாடெங்கிலும்
   ஈடேறும் சுத்த சன்மார்க்க
   ஞான ஆட்சிக் காலமாக
4. ஆகவே அரங்கன் தேடுகின்ற
   ஆற்றல்மிக்க தொண்டர்படைகள் மூலமாக
   வரமென எங்கும் ஆறுமுகன் என் சக்தி
   வல்லமைபட கலந்து இனிதே
5. இனிதே உலக மாற்றமாக
   இயம்பிடுவேன் தர்மபலத்தின் வழி
   துணிவுபட அரங்கன் சன்மார்க்கத்தின் வழி தெய்வநெறி பரவி உலகமெங்கும்
   உலகமெங்கும் ஞானிகள் தலைமை உருவாகி உயர்வான ஞான ஆட்சி மலரக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–